**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து ஆணைக்குழவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், ஆணைக்குழவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

-----------------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.
-

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) முன்னைய வருடத்தின் கட்டிட பராமரிப்புச் செலவுகள் மூலதனப்படுத்தப்பட்ட பிழையை சரிசெய்யும் போது அந்த பராமரிப்புச் செலவுக்கு சீர் செய்யப்பட்டிருந்த ரூபா 1,139,058 ஆன தேய்வுப் பெறுமதி நடப்பு வருடத்தின் | உரிய தேய்வு நீக்கப்படுதல் தவறுதலாக இடம்பெற்றிருப்பதுடன் 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது உரிய வகையில் சரி செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | உரிய சீராக்கங்கள் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேய்வு செலவிலிருந்து குறைப்பட்டதனால் மீளாய்வாண்டின் தேய்வு செலவு அந்த அளவில் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | ஆணைக்குழுவின் நிதியத்தை பயன்படுத்தி விசேட செயற்திட்டம் நடைமுறைப்படுத்தலின் கீழ் செலவு செய்யப்பட்ட ரூபா 24,868,093 அரச மானியங்கள் கீழ் செலவொன்றாக தேறிய இலாபத்திற்கு பின்னர் சீர் செய்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த விசேட செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற நடைமுறையிலுள்ள வேலைகளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 4,241,838 மீண்டெழும் செலவொன்றாக கருதி வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டமையால் ஆணைக்குழுவின் இலாபம் மற்றும் நடைமுறையிலுள்ள வேலைகள் அந்த பெறுமதியில் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இதற்கு முன்னைய வருடங்களிலே முன்வைக்கப்பட்ட வகையிலேயே செயற்திட்டங்களுக்கான செலவுகளின் விபரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது மேலும் விபரமாக முன்வைப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | செலவீனங்கள் சரியாக இனங்கானப்பட்டு கணக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியவற்றுடனான இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1978 திசெம்பர் 18 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | ஆணைக்குழுவினால் சொத்துக்களின் வருடாந்தம் தேய்மானத்திற்குட்படுதல் பெறுமதி அதிகரித்தல் அல்லது பதிவழித்தல் தொடர்பானவைகளை பரிசோதிக்க முடியுமான வகையில் வெவ்வேறாக குறிப்பிட்டு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | உரிய விபரங்களுடனான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | உரிய பதிவேடு முறையாக பேணப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.3.9 ஆம் பிரிவு | ஆணைக்குழுவினால் பெண் முகாமைத்துவ உதவியாளரொருவர் 2020 ஒக்தோபர் 12 ஆந் திகதியிலிருந்து போக்குவரத்து அமைச்சின் சேவைக்காக விடுவிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரையில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 442,932 செலுத்தப்பட்டிருந்தது. | போக்குவரத்து அமைச்சின் கௌரவ போக்குவரத்து அமைச்சரின் துணை ஆளணிக்கு உரிய உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டிருந்தார். | அதற்காக உரிய கொடுப்பனவுகளின் மீள் நிரப்பல் முறையாக இடம்பெற வேண்டும். |
| (இ) | இலக்கம் பீஈடீ 12 ஆம் மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 9.1.2 ஆம் பிரிவு | திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாமல் ஊழியர் காப்புறுதி மற்றும் ஏனைய நலன்புரி நடவடிக்கைகளுக்காக ரூபா 6,744,070 செலவிடப்பட்டிருந்தது. | இதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அத்தோடு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரச் சட்டத்தின் ஊடாக ஊழியர் நலன்களுக்காக அனுசரணை வழங்குவதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | திறைசேரியின் அங்கீகாரத்தை இதற்காக பெறப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | இடைக்கால கட்டுநிதியை பெற்றுக் கொடுத்தல் சந்தர்ப்பத்தில் உச்ச அளவாக ரூபா 100,000 வரையறுக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அந்த வரையறையை விஞ்சும் வகையில் 2020 ஆண்டிற்குள் 7 சந்தர்ப்பங்களில் மொத்தமாக ரூபா 1,678,155 அளவு முற்பணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | ஊழியர் நலன்புரி நடவடிக்கைகளுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது குறைந்த தொகையை முற்பணமாக பெற்றுக் கொடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | உரிய நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 20,894,353 ஆன பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் மேலதிகம் ரூபா 172,514,301 ஆகும். அதன் பிரகாரம், நிதி விளைவில் ரூபா 193,408,384 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பயணப்பாதை அனுமதிப்பத்திர டென்டர் வருமானத்தில் ரூபா 175,996,143 குறைந்தது பிரதானமான காரணமாகக் காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் முன்னேற்றப் பகுப்பாய்வு

- மீளாய்வாண்டிலே முன்னைய ஆண்டிற்கு இணையாக ஆணைக்குழுவின் பிரதான வருமானங்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள பயணப்பாதை அனுமதிப்பத்திர வருமானம், பயணப்பாதை அனுமதிப்பத்திர புதுப்பித்தல் வருமானம் மற்றும் பயணப்பாதை அனுமதிப்பத்திர டென்டர் வருமானம் முறையே நூற்றுக்கு 93 இல், நூற்றுக்கு 48 இல் மற்றும் நூற்றுக்கு 57 இல் குறைந்திருந்தது.

- ஆணைக்குழுவின் ஊழியர் சம்பளச் செலவுகள் 2019 ஆம் ஆண்டிற்கு இணைவாக 2020 இல் நூற்றுக்கு 1.74 இல் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

- மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 0.27 ஆக காணப்பட்டதுடன் அது முன்னைய வருடத்தின் விகிதமாகிய 0.26 க்கு இணையாக கூடுதலான தொகையொன்றாக காணப்படுதல் சீரற்ற நிலமையொன்றாக அவதானிக்க்ப்பட்டது.

- மீளபய்வாண்டின் இலாப விகிதம் முன்னைய வருடத்திற்கு இணையாக நூற்றுக்கு 44 இல் குறைந்து காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்தவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொரோனா தொற்றினால் செயலிழந்துள்ள மாகாணங்களுக்கிடையிலான பேருந்து ஓட்ட நடவடிக்கைகளை சுமுக நிலைக்கு கொண்டுவருவதற்காக உதவியை பெற்றுக்கொடுக்கும்போது பயணப்பாதை அனுமதிப்பத்திர வருமானம் முழுமையாக அறவிடப்படாததன் | 2020 மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திர நாளதுவரையாக்கப்படுதல் கட்டணம், டென்டர் கட்டணம், அதிவேக பயணப்பாதையின் தற்காலிக அனுமதிப்பத்திரக் கட்டணம், லொக் பத்திரக் கட்டணம் மற்றும் தாமதக் கட்டண விடுவித்தலுக்கு 49/2020 உடைய பணிப்பாளர் சபை பத்திரத்தின் ஊடாக அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அவ்வாறே பேருந்து ஓட்ட நடவடிக்கைகள் யூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதிலும் அந்த சந்தர்ப்பத்திலும் ஓட்ட | உரிய விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் பணிப்பாளர் சபையின் தீர்மானங்கள் பெறப்பட வேண்டியதுடன் முறையாக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றிருத்தல் |

| | | |
|---|---|---|
| காரணமாக ரூபா 186,850,808 வருமானமொன்று ஆணைக்குழுவிற்கு இழக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கைகள் சுமுக நிலைக்கு வராதிருந்நதுடன் பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 51/2020 இன் ஊடாக மற்றும் 120/2020 இன் ஊடாக செப்தெம்பர் மாதம் வரையும் உதவியைப் பெற்றுக் கொடுப்பதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. | வேண்டும். |

**3.2 முகாமைத்துவப் பலவீனங்கள்**

| கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்தவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) ஆணைக்குழுவின் ஊடாக பஸ் கம்பனிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனிப்பாகங்கள் 117 அலகு உருப்படிகளுக்காக கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கு, அனைத்து சொத்துக்களுக்கான அடையாளங்கானும் இலக்கமொன்றை பயன்னடுத்துவதற்காக மற்றும் இலக்கமில்லாத 519 உருப்படிகள் கணக்கெடுப்பிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 67 அலகுகள் உருப்படிகள் கணக்கெடுப்பின் போது அடையாளம் காண்பிப்பதற்கு முடியாது காணப்பட்டது. | சொத்துக்களின் இலக்கங்களை குறித்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | ஆணைக்குழுவின் ஊடாக பஸ் கம்பனிகளுக்கு விநியோகிகப்பட்டுள்ள உபகரணங்களுக்காக முறையான இலக்கமிடப்பட்டு அறிக்கை வைத்திருக்கப்பட வேண்டும். |
| (ii) ஆணைக்குழுவினால் 2020 ஆம் ஆண்டிற்குள் டென்டர் மூலமாக புதிய அனுமதிப்பத்திரமொன்றை விநியோகிப்பதற்கு பதிலாக தின அடிப்படையில் அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டதனால் கிடைக்கப்பெற வேண்டிய வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. மேலும், இதன் காரணமாக வருடத்திற்குள் நடைமுறைப்படுத்துவதற்கு 3040 எண்ணிக்கையான பஸ் வாகனங்களுக்கு GPS கட்டமைப்பை பொருத்துவதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும் 1159 வாகனங்களுக்கே பொருத்துவதற்கு முடியுமாயிருந்தது. இது நூற்றுக்கு 38 எண்ணிக்கை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். | உரிய நியமங்களின் பிரகாரம் பஸ் வாகனங்களுக்கு GPS பொருத்தட வேணயடும். |